பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண்.50 நாள் : 13.04.2018

**அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் 6 முதல் 14 வயதுடைய பள்ளிச் செல்லா/இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள், 15 முதல் 18 வயதுடைய இடைநின்ற குழந்தைகளை கணக்கெடுக்கும் பணி ஏப்ரல் 16 முதல் மே 28 வரை நடைபெற உள்ளது.**

இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டப்படி 6 முதல் 14 வயதுடைய அனைத்து பள்ளி வயது குழந்தைகளை முறையான பள்ளியில் சேர்த்து கல்வி கற்க வழிவகை செய்து, தொடக்கக் கல்வியை முடிக்க செய்வது அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் நோக்கமாகும். 6 முதல் 14 வயதுடைய இடைநின்ற / பள்ளிச் செல்லா குழந்தைகளை (இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் உட்பட) கண்டறிவதற்கு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே, அக்டோபர் மாதங்களில் (கணக்கெடுப்பை புதுப்பித்தல்) மற்றும் ஜனவரி மாதங்களில் (பருவ கால இடம்பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளை கண்டறிதல்) சிறப்பு கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும் பள்ளிச் செல்லா/இடைநின்ற குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள்(Identification) பள்ளிச் செல்லா மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் (CWSN out of school) கண்டறிவதற்கான குடியிருப்பு வாரியான கணக்கெடுப்பு (Door to Door survey) மற்றும் ஆரம்பக் கல்வி பதிவேடு புதுப்பித்தல் (EER updation) பணி ஏப்ரல் 16 முதல் மே 28 வரை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வரும் கல்வியாண்டு (2018–19)–ல் நடக்க உள்ள கணக்கெடுப்பில் 6 முதல் 18 வயதுடைய பள்ளிச் செல்லா/இடைநின்ற குழந்தைகளையும் கண்டறிய திட்டமிடப்பட்டுள்ளது.

இது சார்ந்து கடந்த ஆண்டை போலவே சென்னை மாவட்டத்திலுள்ள மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் (DEEO), மாவட்ட கல்வி அலுவலர்கள் (DEO), உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் / ஆசிரியர் பயிற்றுநர்கள் / சிறப்பு ஆசிரியர்கள்/பள்ளி ஆசிரியர்கள்/மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்(IE, DISE, OSC and MDO), RMSA மாவட்ட அலுவலர் மற்றும் பிறதுறை சார்ந்த அலுவலர்கள் (Labour, DISH (Directorate of Industrial Safety & Health), Child Line, ICDS, DCPO, DRDA, Police Department, Health and Welfare departments, வாழ்ந்து காட்டுவோம் திட்ட தன்னார்வலர்கள், NGOs, DDRO அலுவலர்கள்/சுகாதார நலத்துறை மற்றும் கல்வி தன்னார்வலர்கள் இவர்களைக் கொண்டு 2018–19–ம் ஆண்டிற்கான பள்ளிச் செல்லா/இடைநின்ற மற்றும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை கணக்கெடுக்கும் பணியை கீழ்கண்டவாறு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

- ❖ ஒன்றிய அளவில் குழு அமைத்து குடியிருப்புகளை பகிர்ந்தளித்து கணக்கெடுப்பு மேற்கொள்ளுதல்.
- ❖ இடம் பெயர்ந்த குடும்பத்தை சார்ந்த (6–18) வயது வரை உள்ள பள்ளிச் செல்லா/இடைநின்ற மற்றும் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை கண்டறிதல்.

- ❖ ஒவ்வொரு குழுவும் வீடுவீடாக (Door to Door Survey) சென்று கணக்கெடுப்பு மேற்கொள்ளுதல்.
- ❖ இரயில் நிலையம், பேருந்து நிலையம், உணவங்கள், பழம், பூ, காய்கறி அங்காடி மற்றும் குடிசை பகுதிகள், கட்டிட வேலை நடைப்பெறும் பகுதிகள், கடற்கரையோர பகுதிகளில் வாழும் (costal area) வாழும் குடியிருப்பு பகுதிகள் விழாகள் நடைப்பெறும் பகுதிகளில் கணக்கெடுத்தல்.
- ❖ பள்ளி அளவில் கிராம கல்வி குழு மற்றும் பள்ளி மேலாண்மைக்குழு ஆகியோர்களிடம் கலந்தாலோசித்தல்.
- ❖ பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களிடம் கருத்துக்கேட்பு நடத்திடல்.

மேற்கண்ட கணக்கெடுப்பு முறையில் கண்டறியப்பட்ட பள்ளிச் செல்லா/இடைநின்ற மாணவர்களை 2018–19–ம் கல்வி ஆண்டில் நேரடியாக முறையான பள்ளிகளில் சேர்த்து கல்வி பயிலவும், சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சி அளித்து, அவரவர் வயதிற்குரிய வகுப்பில் சேர்த்து முறையான கல்வி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறன் கொண்ட குழந்தைக்கும் முறையான பள்ளிகள் (Regular School), வீட்டுவழி கல்வி (Home Based Education) மற்றும் பள்ளி ஆயத்த பயிற்சி (SRP) மையங்களில் சேர்த்து முறையான கல்வி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**